**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**
**FACULTY OF HUMANITIES AND SOCIAL SCIENCES**
**DEPARTMENT OF LEGAL STUDIES**
**LL.B DEGREE PROGRAMME – LEVEL 5**
**CONTINUOUS ASSESSMENT TEST I– 2014/2015**
**LWU3312 – LAND LAW**
**DURATION: 01 HOUR.**

---

**DATE: 08th September 2015** **TIME: 11.15 a.m. – 12.15 p.m.**

---

**Answer one (01) question only**

**Candidates will be penalized for illegible handwriting.**

01. i. Discuss briefly the different classifications of property in the light of the RDL principles.

**(10 marks)**

ii. "When all the rights of ownership vest in one person to the exclusion of others, he is considered as a sole owner".

**(10 marks)**

Discuss the above statement with reference to relevant statutory provisions which restrict the rights of ownership.

02. Upul invited his university batchmate, Ranil, to occupy his premises at Jayanthipura as he was leaving the country for his master's degree. Since, Upul planned to return in one year and Ranil was a good friend of Upul, he did not think of following any legal formalities required.

However Ranil agreed to return the premises in the original condition upon Upul's return.

During this period of one year Ranil built a small waterfall to add beauty to the garden. He also installed a staircase made of iron to enter the second floor from outside. He bought a new sofa set and a dining table from his own money to decorate the house.

Upul returned to Sri Lanka after eight months and asked Ranil to return the property to him. Ranil refused saying that he could sty till the end of one year, Ranil later agreed to leave the house but wanted to remove the improvements he had made to the premises and building and also take away the sofa set and the dining table.

Upul objects on the ground that all the improvements and additions have now become part of the land and house.

Advice the parties.

**(20 marks)**

*-Copyrights reserved -*

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 5
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - I 2014/2015
காணிச் சட்டம் - LWU3312
காலம்: ஒரு (01) மணித்தியாலயம்

திகதி : 08 செப்டம்பர், 2015 நேரம்: மு.ப 11.15 – பி.ப 12.15

**ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடையளிக்குக**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. (a) உரோமன் டச்சுச் சட்ட எண்ணக்கருக்களின் பின்னணியில் ஆதனங்களின் பல்வேறுபட்ட வகுப்பாக்கங்களை சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

(b) "சொந்தம் தொடர்பான அனைத்து உரிமைகளையும் ஏனையவர்களைத் தவிர்த்து ஒரு நபரிடத்தில் கையளிக்கப்பட்டிருக்கின்ற போது அவர் ஏக உரிமையாளராகக் கருதப்படுவார்".

சொந்தம் என்பதுடன் தொடர்புபட்ட உரிமைகளை மட்டுப்படுத்துகின்ற இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் துணையுடன் மேலே குறிப்பிட்ட கூற்றை ஆராய்க.

(10 புள்ளிகள்)

02. உப்புல் தன்னுடைய மேற்படிப்புக்காக நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருப்பதன் நிமித்தம், ஜயந்திபுரயில் உள்ள தனது ஆதனத்தை உடமைகொள்ளுமாறு தன்னுடைய பல்கலைக்கழக சக மாணவன் ரணிலுக்கு அழைப்பு விடுத்தான். உப்புல் ஒரு வருடத்தின் பின்பு நாட்டிற்கு திரும்புவதாலும், ரணில் தன்னுடைய நல்ல நண்பனாக இருப்பதாலும் அவசியமான சட்டத் தேவைப்பாடுகளைப் பின்பற்ற அவன் விரும்பவில்லை.

எவ்வாறாயினும், உப்புலுடைய மீள் வருகையின் போது ஆதனத்தை எந்தவித மாற்றமும் இன்றி தற்போது இருக்கக்கூடிய அதே நிலையில் மீளக் கையளிப்பதாக ரணில் உடன்பட்டான்.

இந்த ஒரு வருட காலத்தின் போது ஆதனத்தில் இருந்த தோட்டத்திற்கு அழகு சேர்க்கும் முகமாக அவன் சிறியதொரு நீர் தடாகத்தைக் கட்டினான். இரண்டாவது மாடிக்கு வெளிப்பக்கம் இருந்து செல்லக்கூடியவாறு இரும்பினாலான ஒரு படிக்கட்டையும் பொருத்தினான். அவன், வீட்டை மேலும் அழகுபடுத்துவதற்காக தன்னுடைய சொந்தப் பணத்தில் ஒரு புதிய Sofa வையும், உணவு பரிமாறும் மேசை ஒன்றையும் வாங்கினான்.

8 மாதங்களின் பின்பு உப்புல் இலங்கைக்கு திரும்பி வந்ததுடன், தன்னுடைய ஆதனத்தை மீளக் கையளிக்குமாறு ரணிலை வேண்டினான். ரணில் இதற்கு மறுப்புத் தெரிவித்து, ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை தான் அங்கு தங்க முடியுமெனக் குறிப்பிட்டான். பின்பு ரணில் வீட்டை விட்டு வெளியேற உடன்பட்டான். ஆனால், கட்டிடம் மற்றும் ஆதனத்திற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை அகற்றுவதற்கு ரணில் விரும்பினான். மேலும், Sofaவையும் உணவு பரிமாறும் மேசையையும் தான் எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தான்.

ஆதனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சேர்க்கைகளும், செம்மையாக்கல்களும், குறிப்பிட்ட காணி மற்றும் வீட்டின் ஒரு பகுதியாக வந்துவிட்டது என்ற அடிப்படையில் உப்புல் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தான்.

(20 புள்ளிகள்)

திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

பதிப்புரிமை பெற்றது